மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்
MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

History and Traditional Art of Avarani Ananthanarayana Perumal Temple: A Field Study

Dr. A. Raja

Head, Department of Museum, Tamil University, Thanjavur, India

Manuscript ID : **MT23A0122**
Volume : **3**
Issue : **1**
Month : **March**
Year : **2023**
Received: 06.02.2023
Revised: 13.02.2023
Accepted: 20.03.2023
Published: 23.03.2023
Pages : 102-112
DOI: 10.5281/zenodo.7762928

ABSTRACT:

Avarani Ananta Narayana Perumal Temple, also known as Aparanathari, is located in the Nagapattinam district of Tamil Nadu. The complete structure and history of the temple have been highlighted based on the field survey conducted in the temple. The name of Perumal who is the source here is Ananta Narayana Perumal. The Goddess is seated in a separate shrine in the Alankaravallithayar temple. It can be known through the inscriptions that kings such as Kulothungan II, Rajarajan II, Kulothungan III, Rajarajan III, Sadayavarma Kulasekaran, Tippayya Devamakarayar, etc. were involved in the restoration of this temple. This place is the place where Alvars studied. The founder of the temple is depicted in the Anantasayana Kolam. But unlike any other temple, the deity's face is laid down in a way that faces the devotees instead of looking at the sky. The article discusses in detail the features of this temple and the Tamil Traditional architecture. The internal and external structures of the temple, the gate, and all the structures have been accurately measured and recorded in the field survey. These findings make this article very useful for those who do further research on the architecture and sculpture of this temple.

KEYWORDS:

Avarani Perumal Temple, Temple History, Traditional Arts, Fieldwork and Temple studies, Temple documentation, Cholas land measurements.

ஆவராணி அனந்தநாராயணப் பெருமாள் திருக்கோயில் வரலாறும் மரபுசார் கலையும் : கள ஆய்வு

முனைவர். ஆ. ராஜா,
தலைவர்,
அருங்காட்சியகத் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

ஆபரணத்தாரி என்ற ஆவராணி அனந்த நாராயணப்பெருமாள் கோயில் தமிழகத்தில் நாகப்பட்டினம் மாவட்டத்தில் அமைந்துள்ளது. இக்கோயிலில் மேற்கொண்ட கள ஆய்வு அடிப்படையில் கோயிலின் முழுமையான அமைப்பும், வரலாறும் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. இங்கு மூலவராக இருக்கும் பெருமாளின் பெயர் அனந்த நாராயணப் பெருமாள். இறைவி அலங்காரவல்லித்தாயார் கோயிலில் தனி சன்னதியில் அமர்ந்திருக்கிறாள். இந்த கோயிலின் திருப்பணியில் இரண்டாம் குலோத்துங்கன், இரண்டாம் இராசராசன், மூன்றாம் குலோத்துங்கன், மூன்றாம் இராசராசன், சடையவர்ம குலசேகரன், திப்பய்ய தேவமகாராயர் முதலான மன்னர்கள் ஈடுபட்டுள்ளதைக் கல்வெட்டுகள் வாயிலாக அறியமுடிகிறது. இத்தலம் ஆழ்வார்களால் பாடப் பெற்றத்தலமாகும். கோயிலின் மூலவர் அனந்தசயனக் கோலத்தில் காட்சியளிக்கிறார். ஆனால் வேறு எக்கோயிலிலும் இல்லாத வகையில் மூலவரின் முகம் கிடந்த நிலையில் விண்ணை நோக்காமல் பக்தர்களை நோக்கும் பாங்கில் அமைக்கப்பட்டுள்ளது. இக்கோயிலின் சிறப்புகளையும், தமிழர் மரபுசார்ந்த கட்டடக்கலை குறித்தும் கட்டுரை விரிவாக எடுத்துரைக்கிறது. கோயிலின் உள், வெளி கட்டமைப்புகள், வாயில் மற்றும் அனைத்துக் கட்டமைப்புகளும் கள ஆய்வில் துல்லியமாக அளவிட்டுப் பதிவுச்செய்யப்பட்டுள்ளன. இத்தரவுகள் இக்கோயில் கட்டடக்கலை, சிற்பக்கலை குறித்து மேல் ஆய்வுகள் செய்பவர்களுக்கு மிகவும் பயன் தரும் வகையில் இக்கட்டுரை அமைகிறது.

கருச்சொற்கள்

ஆவராணி பெருமாள் கோயில், கோயில் வரலாறு, மரபுசார் கலைகள், களப்பணியும் கோயில் ஆய்வும், கோயில் ஆவணப்படுத்துதல், சோழர் கால நிலளவு முறை

முன்னுரை

நாகப்பட்டினம் மாவட்டம், நாகப்பட்டினம் வட்டம், தஞ்சாவூர்-நாகப்பட்டினம் நெடுஞ்சாலையில் கீழ்வேளுருக்குத் தெற்கேயும் தேவூருக்குக் கிழக்கேயும் 4 கி.மீ தொலைவில் அமைந்துள்ளது ஆவராணி. இவ்வூரின் கிழக்குப் பகுதியில் கிழக்கு நோக்கிவாறு அனந்த நாராயணப்பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலில் இறைவனாக (மூலவர்) அனந்த நாராயணப்பெருமாள் கிடந்த நிலையில் மக்களைப் பார்த்தவாறு (சயனத்தில்) உள்ளார். இறைவியாகத் தனிசன்னதியில் அலங்காரவல்லித்தாயார் அருள்பாலிக்கிறாள். அண்மையில் இத்திருக்கோயிலில் கள ஆய்வு மேற்கொண்டதன் அடிப்படையில் திருக்கோயிலின் தொன்மை வரலாறு, கல்வெட்டுகள், கட்டடக்கலை, சிற்பக்கலை போன்ற மரபுசார் கலைகளை வரலாற்று நோக்கில் ஆவணப்படுத்தி விளக்குகிறது இக்கட்டுரை.

கடுகை ஆற்றுக்குத் தெற்கே 17,010 சதுரடி நிலப்பரப்பில் 66 மீட்டர் நீளத்தையும், 34.15 மீட்டர் அகலத்தையும் கொண்ட வளாகத்திற்குள் அனந்த நாராயணப்பெருமாள் கோயில் அமைந்துள்ளது. இக்கோயிலின் மூலவராக அனந்த நாராயணப்பெருமாள் கருவறையில் கிடந்த நிலையில் மக்களைப் பார்த்தவாறு (சயனத்தில்) அமைந்துள்ளார். இறைவியாக மேற்குப் பிரகாரத்தில் தனி சன்னதியில் அலங்காரவல்லித்தாயார் அருள்பாலிக்கிறார்.

வரலாற்றுச் செய்திகள்

இந்தியத் தொல்பொருள் ஆய்வுத் துறையானது இக்கோயிலில் உள்ள கல்வெட்டுகளைக் கண்டறிந்து, இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை 1922, தொகுதியில் சில கல்வெட்டுகளை வெளியிட்டுள்ளது. இவற்றைத் தொடர்ந்து, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறையினர் 2007இல் வெளியிட்டுள்ள "நாகப்பட்டினம் மாவட்டக்கல்வெட்டுகள்" என்ற நூலில் சில கல்வெட்டுகள் முழு வாசகத்துடன் வெளியிட்டுள்ளனர். இக்கோயிலில் இரண்டாம் குலோத்துங்கச் சோழன் (கி.பி.1148), இரண்டாம் இராசராசன் (கி.பி.1163), மூன்றாம் இராசராசன் (கி.பி.1193), மூன்றாம் இராசராசன் (கி.பி.1219) ஆகிய மன்னர்களின் கல்வெட்டுகள் மற்றும் கி.பி 12-13 ஆம் நூற்றாண்டு கல்வெட்டுகளும் கி.பி 13 ஆம் நூற்றாண்டைச் சேர்ந்த சடையவர்மன் குலசேகர பாண்டியனின் கல்வெட்டுகளும், திப்பய்ய தேவமகாராயர் (விஜயநகரர்) (கி.பி.1434) கல்வெட்டுகளும் காணப்படுகின்றன. பெரும்பாலான கல்வெட்டுகள் தற்பொழுது அழிந்த நிலையில் இருப்பதைக் காணமுடிகிறது. இக்கோயிலுள்ள இரண்டாம் இராசராசன் (1163) கல்வெட்டில் இவ்வூரை ஆபரணச்சதுர்வேதிமங்கலம் என்றும், விஜயநாகர காலத்து திப்பய்ய மகாதேவராயர் (கி.பி.1434) கல்வெட்டில் ஆபரணத்தாரி என்றும் உத்தராந்தபுரம் என்றும் குறிப்பிடுகிறது. இக்கோயிலில் உள்ள

பள்ளி கொண்ட பெருமாளுக்கு உடல் முழுவதும் ஆபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுள்ளதால் இவ்வூரின் பெயர் ஆபரணத்தாரி என்று வழங்கலாயிற்று. இன்று வழக்கில் ஆபரணத்தாரி என்பது மருவி ஆவராணி என்று அழைக்கப்படுகிறது.

இக்கோயில் கருவறை உட்புறச் சுவரிலுள்ள இரண்டாம் இராஜராஜனின் (கி.பி.1163) கல்வெட்டு திருஆபரணச் சதுர்வேதிமங்கலத்து இறைவனுக்கு நந்தா விளக்கிற்கு 60 காசுகள் பிராமணர்களிடம் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது (சீதாராம் குருமூர்த்தி, 2007.)

மூன்றாம் குலோத்துங்கச்சோழனின் (கி.பி.1193) கல்வெட்டானது ஸ்ரீமாஹேஸ்வரக் கண்காணி செய்வார்களுக்கும், கண்காணி செய்வார்களுக்கும், கோயிற்கணக்கனுக்கும், சித்திரலேகை பெரும்பள்ளி ஊரார் செய்து கொடுத்த ஒப்பந்தத்தைக் குறிப்பிடுகிறது.

சடையவர்மன் குலசேகரப்பாண்டியனின் (கி.பி.13ஆம் நூற்றாண்டு) கல்வெட்டானது அருமொழி தேவ வளநாட்டு இடைக்கழிநாட்டு பொன்மலைக் குன்றுடையார் என்ற சிவன் கோயிலுக்கு திருவிடைநாச்சி, எல்லாக்கு நாச்சி என்ற இரு பெண்கள் ஒரு வேலி நிலத்தை வரியில்லாமல் கொடுத்ததைக் குறிப்பிடுகிறது. (சீதாராம் குருமூர்த்தி, 2007.)

இக்கோயில் கருவறை வடக்கு, மேற்கு, தெற்கு குமுதப்படையிலுள்ள திப்பய்ய தேவமகாராயர் (கி.பி.1434) கல்வெட்டானது ஊர்ப் பெயர் ஆபரணதாரி என்றும் உத்தராந்தபுரம் என்றும் குறிப்பிடுகிறது. மேலும், பள்ளிகொண்ட பெருமாள் கோயிலுக்கு முன்பிருந்ததுபோல் மீண்டும் வரிவிலக்குடன் நிலங்கள் திருவிடையாட்டமாகக் கொடுக்கப்பட்டமை குறித்தும், கல்வெட்டின் இறுதியில் தானத்தைக் காக்கவேண்டியதன் அவசியம் குறித்தும் விளக்குகின்றது இக்கல்வெட்டு (சீதாராம் குருமூர்த்தி, 2007.)

நில அளவு கோல்

அனந்த நாராயணப்பெருமாள் கோயில் கருவறை தென்புறமுள்ள குமுதபடைக்குக் கீழுள்ளப் பட்டியில் 380 செ.மீ (12 அடி) நீளமுள்ள கூட்டல் குறியீடுடன் உள்ள நீட்டல் அளவு கோல் ஒன்று உள்ளது. இந்நீட்டல் அளவு முறையில் இரண்டு கூட்டல் குறியீடுகள் உள்ளன. இக்குறியீடுகளுக்கு இடைப்பட்டப் பகுதி 380செ.மீ நீளம் கொண்டதாக உள்ளது. இதை ஒரு முழு அளவுள்ள ஒரு கோலாக எடுத்துக்கொள்ளலாம். இதன் கால் பகுதி 95செ.மீ (3அடி) என்றும் அரைப்பகுதி 190செ.மீ (6அடி) என்றும் முக்கால் பகுதி 285செ.மீ (9அடி) என்றும் முழுப்பகுதி 380செ.மீ (12அடி) என்றும் கணக்கிட வேண்டும்.

+________________________+380 செ.மீ (நில அளவு கோல்)

மேற்குறிப்பிட்ட நில அளவு கோல் இடைக்காலச் சோழர் காலத்தில் நில அளவு முறைக்குப் பயன்படுத்தப்பட்ட கோலாக இருக்கலாம் எனத் தெரிகிறது. இக்கோல் இத்தலத்தில் கள ஆய்வு மேற்கொண்டதன் வாயிலாக அடையாளம் காணப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இதேபோன்று நிலங்களை அளப்பதற்கு இடைக்காலத்தின் தொடக்கத்திலிருந்து இடைக்காலத்தின் பிற்காலம் வரை பல்வேறு வகையான அளவு முறையில் கோல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. குறிப்பாக இடைக்காலத்தின் தொடக்கத்தில் 25.5செ.மீ நீளம் முதல் 400 செ.மீ வரையும், பிற்கால இடைக்காலமாகிய கி.பி.14ஆம் நூற்றாண்டுக்குப் பின் 697செ.மீ நீளம் வரையும் கோல்கள் நில அளவு முறைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன (Selvakumar, 2015). வரி விதிப்பில் மாற்றங்கள் கொண்டுவருவதற்காக இந்த அளவு முறை மாற்றங்களும் இருந்திருக்கலாம். ஒரு வேளை பரந்த நிலப்பரப்புகளை அளவிடும்போது நேரத்தைக் குறைப்பதற்காகவும் இதுபோன்ற அளவு மாற்றங்களை ஏற்படுத்திருக்க வேண்டும். தமிழகத்தின் வட மாவட்டங்களிலுள்ள திருக்கோயில்களிலும் காவிரிப்படுக்கைகளிலுள்ள திருக்கோயில்களிலும் இந்த நில நிர்வாக அளவு முறைகளைக் காணமுடிகிறது. இப்பகுதிகளில் விளை நிலங்கள் மிகுதியாக இருப்பதால் வரி விதிப்பு முறையில் மாற்றங்கள் ஏற்படுத்த அல்லது நில நிர்வாக முறையைச் சீர்செய்வதற்கு இந்த நில அளவு முறையைப் பயன்படுத்திருக்கலாம். இவ்வாறு பாரம்பரியம் மிகுந்த மரபுசார்ந்த இந்த அளவுகளை (கோல்) திருக்கோயில்களில் பதிவுசெய்யப்பட்டுள்ளன. இக்கோல் வட்டாரத்திற்கு வட்டாரம் மாறுபட்ட நிலையில் இருப்பதையும் காணமுடிந்தது.

தலவரலாறு

ஆழ்வார்களால் மங்களாசாஸனம் செய்யப்பெற்ற 108 திருப்பதிகளில் 26 வதாக அமைந்துள்ள பஞ்ச நாராயண க்ஷேத்திரங்களில் இரண்டாவது தலமாக ஆபரணதாரி ஸ்ரீஅனந்தநாராயனப் பெருமாள் திருக்கோயில் அமைந்துள்ளது. திருவரங்கக்கோயில் திருப்பணிக்குப் பொருளீட்டும் பொருட்டு நாகப்பட்டினம் புத்த விஹாரத்தில் உள்ள பொற்சிலையைக் கவர்ந்து செல்லும் நோக்கோடு திருமங்கை மன்னன் நடைப் பயணம் மேற்கொண்டு கீழ்திசை நாடு சென்று, வழி காண வாழக்கரை சென்று வாழைமரம் கொண்டு புத்த விஹாரத்தில் உள்ள பொற்சிலையைக் கவர்ந்து இரவு பயணம் மேற்கொண்டு இக்கிராமம் வழியாக வரும்போது சர்வ ஆபரண பூஷிதராக இருந்த ஆபரணதாரி அனந்த நாராயணப்பெருமாள் என்று கூற ஆபரணதாரி என்ற பெயர் கொண்ட ஊர் மருவி இன்று ஆவராணி என்று அழைக்கப் பெறுகிறது (தலவரலாறு). இக்கோயில் ஆழ்வார்களால் பாடப் பெற்றத்தலமாகும்.

கட்டடக்கலை

அனந்த நாராயணப்பெருமாள் கோயிலானது 17010 சதுரடி நிலப்பரப்பில் கிழக்கு நோக்கிவாறு அமைந்துள்ளது. கருவறை, அர்த்தமண்டபம், மகா மண்டபம், முன்மண்டபம் நுழைவுவாயில் கோபுரம் என்ற அமைப்பில் கட்டமைக்கப்பட்டுள்ளது.

கருவறை

கருவறையானது 7.85 மீட்டர் நீளத்தையும், 8.80 மீட்டர் அகலத்தையும் கொண்டு கட்டமைக்கப்பட்டுள்ளது. இதன் வாயில் 1.20 மீட்டர் அகலத்தைக் கொண்டு உள்ளது. கருவறையின் வெளிக் கட்டுமானத்தை நோக்கும் பொழுது கருவறையின் கட்டுமானம் அர்த்தமண்டபத்தில் இணைந்தவாறு கட்டமைக்கப்பட்டுள்ளது. அர்த்தமண்டபத்தின் நுழைவுவாயில் 1.20 மீட்டர் அகலத்தைக் கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. கட்டுமானத்தில் கருவறையையும் அர்த்தமண்டபத்தையும் தனியாகப் பிரித்துக்காட்டப்பட்டுள்ளது. இதில் இரண்டு உருண்டை அமைப்புடைய தூண்கள் உள்ளன. கருவறை சுவர்களில் உள்ள தூண்களின் அமைப்பானது கலசம், கண்டம், கிரிவம், குடம், மற்றும் விரிந்த தாமரை இதழ்களைக் கொண்ட பலகை அமைப்பைக் கொண்டு வடிமைப்பபட்டுள்ளது. இக்கோயிலின் கட்டமைப்புகளை நோக்கும்போது கி.பி.12ஆம் நூற்றாண்டைச் சார்ந்தவையாகக் கருதமுடிகிறது.

கோட்ட அமைப்பு

கருவறையின் வெளிப்புறச் சுவரில் மூன்று பக்கங்களிலும் உள்ள கோட்ட அமைப்புகள் திராவிடப் பாணியில் கட்டப்பட்டுள்ளன. இவற்றில் தெற்கு மற்றும் மேற்குப் புறங்களில் உள்ள கோட்ட அமைவுகளில் சிற்பங்கள் (தெய்வங்கள்) காணப்படவில்லை. வடக்குப் புறத்தில் உள்ள கோட்டத்தில் மட்டும் பிரம்மா சிற்பம் உள்ளது.

விமானத்தின் அமைப்பு

இக்கோயிலின் விமானத்தின் கீழ் கட்டுமான அமைப்பானது (அதிட்டானம்) வெளிப்புறத்தில் 7.85 மீட்டர் நீளத்தையும், 8.80 மீட்டர் அகலத்தையும் கொண்டதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. விமானத்தின் மேல் கட்டுமானம் செங்கற்கல்லால் கட்டப்பட்டுள்ளது. விமானத்தில் உள்ள அனைத்துச் சிற்பங்களும் சுதைச் சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளன.

மகாமண்டபம்

இக்கோயில் மகாமண்டபமானது 9.40 மீட்டர் நீளத்தையும், 9.30 மீட்டர் அகலத்தையும் கொண்ட அளவு முறையில் கட்டப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் தெற்கு வடக்கில் 2.45 மீட்டர் இடைவெளியிலும், கிழக்கு மேற்கில் 1.80 மீட்டர் இடைவெளியிலும் 16 தூண்கள் காணப்படுகின்றன. இத்தூண்கள் எட்டுப்பட்டை மற்றும் பதினாறு பட்டை அமைப்பில் காணப்படுகின்றன. இம்மண்டபத்தின் மத்தியில் வடக்குப் புறத்தில் தெற்கு நோக்கியவாறு சிறிய அமைப்பில் அநுமநேசர் சன்னதி உள்ளது. இம்மண்டபத்தின் கட்டமைப்பை நோக்கும்போது நாயக்கர் காலத்தில் கட்டப்பட்டவையாக இருக்கலாம் எனத் தெரிகிறது.

முகமண்டபம்

மகாமண்டபத்துக்கு அடுத்த நிலையில் இருப்பது முகமண்டபமாகும். இம்மண்டபமானது 12.30 மீட்டர் நீளத்தையும் 9.60 மீட்டர் அகலத்தையும் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளது. இம்மண்டபத்தில் 3.35 மீட்டர் இடைவெளியிலும், 1.60 மீட்டர் இடைவெளியிலும் 12 தூண்கள் உள்ளன. இது பிற்காலமான மராட்டியர் காலத்தில் அமைக்கப்பட்ட மண்டபமாக இருக்கலாம்.

கருடாழ்வார் சன்னதி

கருடாழ்வார் சன்னதியானது மகாமண்டபத்திற்கு எதிர்புறத்தில் 0.76 மீட்டர் இடைவெளியில் 1.44 மீட்டர் நீளத்தையும், 1.44 மீட்டர் அகலத்தையும் உடையவையதாகக் கட்டமைக்கப்பட்டுள்ளது. இதில் கருடாழ்வார் கருவறையை நோக்கியவாறு அமைந்துள்ளார்.

பலிபீடம்

கருடாழ்வார் சன்னதிக்கு அடுத்த நிலையில் 0.90 மீட்டர் இடைவெளியில் 0.90 மீட்டர் நீளத்தையும், 0.90 மீட்டர் அகலத்தையும் கொண்டவையாக அமைக்கப்பட்டுள்ளது.

ஆழ்வார்கள் சன்னதி

இக்கோயிலின் தெற்குப் பிரகாரத்தில் ஆடல் அரங்கம் ஒன்று உள்ளது. இதன் உள்பகுதியில் ஆழ்வார்கள் உள்ள சன்னதி தற்காலத்தில் கட்டப்பட்டுள்ளது.

ஸ்ரீஅலங்காரவல்லி தாயார் சன்னதி

இக்கோயிலின் மேற்கு பிரகாரத்தில் கிழக்கு நோக்கியவாறு ஸ்ரீஅலங்காரவல்லி தாயார் சன்னதி அமைத்துள்ளது. தாயார் வீற்றிருக்கும் கருவறை 5.15 மீட்டர் நீளத்தையும், 3.60 மீட்டர் அகலத்தையும் கொண்டவையாகக் கட்டப்பட்டுள்ளது.

நுழைவுவாயில் (கோபுரம்)

அனந்த நாராயணப்பெருமாள் கோயிலின் கோபுர நுழைவுவாயில் 7.20 மீட்டர் நீளத்தையும், 9.64 மீட்டர் அகலத்தையும் கொண்டு அதிட்டானப் பகுதி அமைக்கப்பட்டுள்ளது. சுவர்ப் பகுதிக்கு மேல் கோபுர கட்டுமானம் இல்லாமல் கட்டமைக்கப்பட்டுள்ளது.

திருச்சுற்று மாளிகை

இக்கோயில் ஒரு சுற்று மாளிகை அமைப்பைக் கொண்டுள்ளது. கிழக்கு பிரகாரம் 10.40 மீட்டர் அகலத்தையும், தெற்கு பிரகாரம் 7.15 மீட்டர் அகலத்தையும், மேற்கு பிரகாரம் 22.15 மீட்டர் அகலத்தையும், வடக்கு பிரகாரம் 11.35 அகலத்தையும் உடையதாக அமைந்துள்ளது.

சிற்பக்கலை

இக்கோயிலின் கருவறையில் கிடந்த (சயனம்) நிலையில் அனந்த நாராயணப்பெருமாள் உள்ளார். அனந்த நாராயணப்பெருமாள் சிற்பமானது 27 நீளத்தில் 7 தலை ஆதிஷேசன் மேல் பள்ளி கொண்டிருக்கிறார். இவர் உடல் முழுவதும் ஆபரணங்கள் அணிந்து, நாகத்தின் மேல் ஒரு கை தலையைத் தாங்க மற்றொரு கை முழங்கால்வரை நீண்டு கன்னங்கரிய அமைப்பில் தைலக்காப்புக்குள்ளே இருக்கிறார் பெருமாள். சிரத்தின் மேல் மணிமகுடம், கர்னங்களில் குண்டலம், புஜல்களில் கடகம், மார்பில் நலங்கிளர் ஆரம், உத்தரிய தண்டை என அணிந்து சயனத்தில் மக்களைப் பார்த்தவாறு (வீதியை) அமைந்துள்ளார்.

அர்த்தமண்டபத்தின் வடக்கு பக்கத்தில் ஸ்ரீனிவாச பெருமாள், யாதவ நாராயணன், செல்வர், விஸ்வக்ஷேனர் சிற்பங்கள் தென் திசை நோக்கியவாறு அமைந்துள்ளன. இம்மண்டபத்தின் சுவர்களின் மேல் பகுதியில் பூதகணங்கள் புடைப்பு சிற்பங்களாக வடிவமைக்கப்பட்டுள்ளது. மகாமண்டபத்தின் வடக்கு பக்கத்தில் தெற்கு நோக்கியவாறு ஸ்ரீபத்ம ஆஞ்சநேயர் சிற்பம் சிறு சன்னதியில் உள்ளது. முகமண்டபத்தின் தெற்குப் பக்கத்தில் கிழக்கு நோக்கியவாறு விநாயகர் சிற்பம் உள்ளது. இம்மண்டபத்தின் எதிர்புறத்தில் தனி சன்னதியில் கருடாழ்வார் மூலவரைப் பார்த்து இரு கைகளைச்

சேர்த்து வணங்கிய நிலையில் அமைந்துள்ளார். இதற்கு அடுத்த நிலையில் கருடாழ்வார் சன்னதிக்குப் பின்புறம் பலிபீடம் உள்ளது.

கோட்டத் தெய்வங்கள்

கருவறையின் வட புறமுள்ள கோட்டத்தில் வடக்கு நோக்கியவாறு பிரம்மா சிற்பம் உள்ளது. பிரம்மா நான்கு தலைகள், நான்கு கைகளுடன் உள்ளார். வலது முன் கை அபய முத்திரையுடனும், இடது முன் கை இடுப்பில் வைத்தவாறும் உள்ளது. மற்ற இரு புறங்களில் உள்ள கோட்டமைப்பில் சிற்பங்கள் காணப்படவில்லை.

பிரகாரத் தெய்வங்கள்

இக்கோயிலின் தென் பிரகாரத்தில் தனி சன்னதியில் வடக்கு நோக்கியவாறு மணவாளமுனிகள், திருமங்கையாழ்வார், நம்மாழ்வார் சிற்பங்கள் உள்ளன. மேற்குப் பிரகாரத்தில் உள்ள ஸ்ரீஅலங்காரவல்லி தாயார் சன்னதி கருவறையில், அலங்காரவல்லி தாயார் சிற்பம் கிழக்கு நோக்கியவாறு உள்ளது.

எனவேதான், தொன்மையான கோயில்கள் இறை வழிபாட்டுத் தலங்களாக மட்டுமின்றி கலை, வரலாறு மற்றும் பண்பாடுப் பதிவுகளை வெளிப்படுத்தும் கருவூலமாகவும் விளங்குகின்றது. (ராஜா, 2020). அதேபோன்று இக்கோயிலிலுள்ள அனைத்து தரவுகளும், குறிப்பாக மரபுசார்ந்த கட்டடக்கலையும், சிற்பக்கலையும் தனித்துவம் வாய்ந்த மரபுச்செல்வங்களுக்குக் காட்டாக அமைந்துள்ளது எனலாம்.

இக்கோயிலுக்கு எதிர்புறம் வடகிழக்கு திசையில் அனந்தபுஷ்கரிணி தீர்த்தக்குளம் உள்ளது.

திருவிழா

இக்கோயிலில் ஆனி மாதத்தில் திருக்கல்யாணம் மற்றும் தைலக் காப்புவிழா நடைபெறும். மார்கழி மாதத்தில் வைகுண்ட ஏகாதசி நிகழ்ச்சியும், மாசி மாதத்தில் மாசி மகத்தன்று பெருமாள் வாகனத்தில் நாகப்பட்டினம் கடற்கரை சென்று வரும் காட்சி நடைப்பெற்று வருகிறது. இந்நிகழ்வு இக்கோயிலின் முக்கிய விழாவாகும்.

முடிவுரை

சோழ மன்னர்கள் தங்களின் ஆளுமைக்குட்பட்ட பகுதிகளில் குறிப்பாகச் சோழநாட்டில் காவிரி படிக்கையிலுள்ள நிலங்களை அளந்து வரைமுறைப்படுத்துவதற்குப் பொதுவான ஒரு நில அளவு முறையைப் பயன்படுத்தியுள்ளனர். அத்தகைய நில அளவுக் குறியீடுகளைத் திருக்கோயில்களில்

குறித்து வைத்துள்ளனர். இத்தகைய நில அளவு கோல் இக்கோயில் கோயில் கருவறை தென்புறமுள்ள குமுதபடைக்குக் கீழுள்ளப் பட்டியில் இரண்டு கூட்டல் குறியீடாகப் பொறிக்கப்பட்டுள்ளது. இக்கோல் இடைக்காலத்தைச் சார்ந்தவையாகும். பிற்காலங்களில் ஒவ்வொரு காலக்கட்டத்திலும் ஆளும் வர்க்கத்தினர் வெவ்வேறு விதமான நில அளவு முறையினைப் பயன்படுத்தி, நிலங்கள் வகைப்படுத்தப்பட்டுள்ளன. அந்நிலங்களுக்கு வரியும் விதிக்கப்பட்டுள்ளது. அவ்வாறு விதிக்கப்பட்ட வரி வருவாயானது அரசின் பிரதான வருவாயாகக் கருதப்பட்டுள்ளது.

கள ஆய்வில் ஆவணப்படுத்தப்பட்ட தகவல்களோடு தலவரலாற்று தகவல்களும், கல்வெட்டுச் செய்திகளும் பதிவுச்செய்யப்பட்டுள்ளன. இக்கோயிலிலுள்ள கல்வெட்டுகள், கட்டடக்கலை மற்றும் சிற்பக்கலைகளின் அமைவுகளின் அடிப்படையில் இக்கோயில் இடைக்காலத்தைச் (கி.பி.12ஆம் நூற்றாண்டு) சாந்தவையாகக் கருதலாம்.


பின்னிணைப்புகள்


கல்வெட்டு அட்டவணை


வ.எண்	அரசன்	வம்சம்	ஆண்டு	இ.க.ஆ.அ. நோக்கீடு	த.அ.தொ.து. நோக்கீடு
1	இரண்டாம் குலோத்துங்கன்	சோழர்	கி.பி 1148	492/1922	12/1999
2	இரண்டாம் இராசராசன்	சோழர்	கி.பி 1163	491/1922	7/1999
3	மூன்றாம் குலோத்துங்கன்	சோழர்	கி.பி 1193	487/1922	9/1999
4	மூன்றாம் இராசராசன்	சோழர்	கி.பி 1219	486/1922	8/1999
5	-	-	கி.பி 12 ஆம் நூற்றாண்டு	-	10/1999
6	-	-	கி.பி 12-13 ஆம் நூற்றாண்டு	-	11/1999
7	-	சோழர்	கி.பி 12-13 ஆம் நூற்றாண்டு	485/1922	15/1999
8	-	-	கி.பி 13 ஆம் நூற்றாண்டு	-	13/1999
9	-	சோழர்	கி.பி 13 ஆம் நூற்றாண்டு	-	14/1999
10	சடையவர்ம குலசேகரன்	பாண்டியர்	கி.பி 13 ஆம் நூற்றாண்டு	484/1922	6/1999
11	திப்பய்ய தேவமகாராயர்	விஜயநகரர்	கி.பி 1434	482/1922	5/1999

இ.க.ஆ.அ. நோக்கீடு - இந்தியக் கல்வெட்டு ஆண்டறிக்கை அட்டவணை நோக்கீடு
த.அ.தொ.து. நோக்கீடு - தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை நோக்கீடு

புகைப்படம்


ஆவராணி-அனந்த நாராயணப் பெருமாள் திருக்கோயில் முழுத் தோற்றம்


ஆவராணி - அனந்த நாராயணப் பெருமாள் திருக்கோயில் விமானத் தோற்றம்


ஆவராணி - அனந்த நாராயணப் பெருமாள் திருக்கோயில் மண்டபம்


ஆவராணி - பெருமாள் திருக்கல்யாணக்கோலம்

துணைநூற்பட்டியல்

1. சீதாராம் குருமூர்த்தி. *நாகப்பட்டினம் மாவட்டக் கல்வெட்டுகள்.* சென்னை, தமிழ்நாடு அரசு தொல்லியல் துறை, 2007.
2. ஆ, ராஜா. "கலை, பண்பாட்டுத் தளத்தில் சோமேஸ்வரர் திருக்கோயில்". *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, தொகுதி. 5, பதிப்பு. 1, ஜூலை 2020, 22-27. https://doi.org/10.34293/tamil.v5i1.3400.
3. ஆ, ராஜா, த, ஆதித்தன், சி, வேல்முருகன். "திருவேதிக்குடி வேதபுரீஸ்வரர் திருக்கோயில் மரபுசார் கலையும் கள ஆய்வு தரவுகளும்". *சான்லாக்ஸ் பன்னாட்டுத் தமிழியல் ஆய்விதழ்*, தொகுதி. 6 பதிப்பு. 3, ஜனவரி 2022, 38-45 https://doi.org/10.34293/tamil.v6i3.4622.

REFERENCES

1. Seetharam Gurumoorthy. *Nagapattinam maavatta kalvettukal*. Chennai, State Archaeology Department of Tamil Nadu, 2005.
2. A, Raja. "Art and Culture of Someswarar temple (Kalai, Panbaattu Thalathil Someswarar Thirukkoyil)." *Shanlax International Journal of Tamil Research*, vol. 5, no. 1, July 2020, pp. 22-27. https://doi.org/10.34293/tamil.v5i1.3400.
3. A, Raja, T, Athithan, and C, Velmurugan. "Thiruvedikudi Vedapuriswarar Temple Traditional Art and Field Research Data." *Shanlax International Journal of Tamil Research*, vol. 6, no. 3, Shanlax International Journals, Jan. 2022, pp. 38-45. https://doi.org/10.34293/tamil.v6i3.4622.
4. *Annual report of Indian Epigraphy*. New Delhi, Archaeological survey of India, 1922.
5. S R, Balasubrahmanyam. *Middle Chola Temples (985-1070)*. Faridabad, Thomson Press, Publication Division, 1975.
6. V, Selvakumar, "Project Report: Metrological Traditions of South India." Indian Journal of History of Science, vol. 50, no. 2, *Indian National Science Academy*, June 2015, https://doi.org/10.16943/ijhs/2015/v50i2/48245.
7. Y, Subbarayalu. *Land Measurement in Medieval Tamil Nadu in Studies in Chola History*. Madras, 2001.
8. P, Shanmugam. *The Revenue System of the Cholas 850-1279*. Chennai, New Era Publications, 1987.